**Dated : 25.02.2026**

**O.S.No. 365/2022**

**PW.1 – திரு. முனிரத்தினம்**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

இந்த பிரதிவாதிகளை எனக்கு எப்படி தெரியும் என்ற விவரத்தை என்னுடைய தாவாவிலோ, முதன்மை சாட்சியத்திலோ நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதிகள் நான் தாக்கல் செய்த வழக்கிற்கு ஒரு எதிருரை தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் கூறியுள்ள விவரங்களை மறுத்து நான் என்னுடைய முதன்மை சாட்சியத்தில் எந்த விவரமும் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். 09.12.2019 தேதியிலிருந்து இந்த வழக்கு பதியப்படும் நாள் வரை ஒரு நாள் கூட வட்டியாக எந்த தொகையும் கொடுக்கப்படவில்லை என கூறியுள்ளேன் என்றால் சரிதான். 09.12.2019 தேதியிலிருந்து வழக்கு தாக்கல் செய்த காலம் வரை ஏதாவது பஞ்சாயத்தோ அல்லது காவல் நிலையத்தில் மனுவோ தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். அந்த விவரத்தையும் நான் என்னுடைய தாவாவில் கூறவில்லை என்றால் சரிதான். அந்த சங்கதிகளை பொருத்து இந்த வழக்கில் நான் சொல்லாமல் இருந்ததற்கு என்ன காரணம் என்றால் நான் வழக்கு கொடுத்தவுடன் நீதிமன்றம் சென்று பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார்.

யாரை வைத்து நான் பைசல் பேசினோம் என்றால் யாரை வைத்தும் பேசவில்லை. நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. 12 புரோநோட்டுக்களை இணைத்து நான் காவல் நிலையத்தில் பிரதிவாதிகளுக்கு எதிராக புகார் கொடுத்தேன் என்றால் அது பழைய கொடுக்கல் வாங்கல் சம்மந்தப்பட்டது. அந்த 12 புரோநோட்டுக்களிலும் எழுதப்பட்டதும், எழுதப்படாததும் இருந்தது. 05.02.2010 தேதியில் ரூ.50,000/– என குறிப்பிட்டு அதில் இந்த தாவாவில் குறிப்பிட்டுள்ள புரோநோட்டுக்களை பற்றி நான் எந்த விவரமும் குறிப்பிடவில்லை என்றாலும், 20.10.2016 தேதியில் ரூ.50,000/–க்கு 2ம் பிரதிவாதி கையொப்பமிட்டதாக ஒரு புரோநோட்டும், 01.12.2016 தேதியில் ரூ.50,000/– என குறிப்பிட்டு 1ம் பிரதிவாதி கையொப்பமிட்டதாக ஒரு புரோநோட்டும், 24.05.2017 தேதியில் ரூ.50,000/–க்கு 1, 2 பிரதிவாதிகள் கையொப்பமிட்டதாக ஒரு புரோநோட்டும், 24.10.2017 தேதியில் ரூ.1,30,000/–க்கு 1, 2 பிரதிவாதிகள் கையொப்பமிட்டதாக ஒரு புரோநோட்டும், 20.11.2017 தேதியில் ரூ.1,00,000/–க்கு 1, 2 பிரதிவாதிகள் கையொப்பமிட்டதாக ஒரு புரோநோட்டும்,

01.03.2018 தேதியில் ரூ.1,00,000/-க்கு 1ம் பிரதிவாதி கையொப்பமிட்டதாக ஒரு புரோநோட்டும், 17.08.2018 தேதியில் ரூ.1,80,000/- என குறிப்பிட்டு 1ம் பிரதிவாதி கையொப்பமிட்டதாக ஒரு புரோநோட்டும், 04.10.2018 தேதியில் ரூ.75,000/- என குறிப்பிட்டு 1ம் பிரதிவாதி கையொப்பமிட்டதாக ஒரு புரோநோட்டும், 24.11.2018 தேதியில் ரூ.1,40,000/- என குறிப்பிட்டு 1ம் பிரதிவாதி கையொப்பமிட்டதாக ஒரு புரோநோட்டும், 20.02.2019 தேதியில் ரூ.1,50,000/- என குறிப்பிட்டு 1ம் பிரதிவாதி கையொப்பமிட்டதாக ஒரு புரோநோட்டும், 28.06.2019 தேதியில் ரூ.60,000/- என குறிப்பிட்டு 1ம் பிரதிவாதி கையொப்பமிட்டதாக ஒரு புரோநோட்டும் இவை அனைத்திலும் 05.10.2015-ல் ரூ.50,000/- வாங்கியதாக குறிப்பிட்டுள்ள புரோநோட்டை தவிர 2 முதல் 12 வரையிலான புரோநோட்டுக்களில் எதுவும் எழுதப்படாமல் இருந்தது என்றால் அந்த ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும்.

வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னதாகவே காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன், அந்த புகாரில் ஏன் தாவா புரோநோட்டினை குறித்து நான் குறிப்பிட்டு ஏன் புகாரில் சொல்லவில்லை என்றால் ஏற்கனவே பழைய கொடுக்கல் வாங்கல் இருந்தது, அதனால் அந்த புரோநோட்டில் கையொப்பமிட்டு கொடுத்து அதற்காக தான் ரூ.20,00,000/- எழுதிக்கொடுத்தார்கள். அந்த புரோ நோட்டுக்களுக்கு கால அவகாசம் இருக்கவில்லை, ஆனால் இந்த தாவா புரோநோட்டுக்களுக்கு கால அவகாசம் இருந்ததால் நான் அந்த புரோநோட்டை பொருத்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 12 புரோநோட்டுக்களுக்கும் கால அவகாசம் இல்லாததால் நான் அந்த 12 புரோநோட்டுக்களை பொருத்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளேன், காவல் நிலையத்தில் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறியதாக சொல்லியிருக்கிறேன், அப்படியாயின் அந்த 12 புரோநோட்டுக்களுக்கும் உண்டான தொகைகள் எனக்கு கிடைக்கப்பெற்றுவிட்டதா என்றால் கிடைத்துள்ளது.

இந்த பிரதிவாதிகள் கிருஷ்ணகிரியில் உள்ள சிவன் கோவிலுக்கு அடிக்கடி வருவார்கள், அங்கு தான் எனக்கு அவர்களுடன் பழக்கம் என்றால் சரிதான். அவர்களுக்கு திருமணம் ஆகி 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் குழந்தைகள் இல்லை என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் தான் I.V. முறைபடி குழந்தை பெற்றுக்கொள்ளலாம் என நானும் கூறினேன் என்றால் சரிதான். அதற்கு சுமார் ரூ.3,00,000/- செலவாகும் என பிரதிவாதிகள் குறிப்பிட்டார் என்றால் அதற்கு நான் பணம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டேன் என்றால் சரிதான். 28.06.2016 தேதியில் ரூ.3,00,000/- பணமாக வாங்கிக்கொண்டு என்னிடம் புரோநோட்டு எழுதிக்கொடுத்தார் என்றால் பாண்டு பேப்பரில் எழுதிக்கொடுத்தார். அதற்கு நான் பத்து ரூபாய் வட்டி வீதத்தில் பணம்

வாங்கிக்கொண்டு அவர்கள் 3 மாதத்திற்கு மட்டும் தான் வட்டி கொடுத்தார் என்றால் சரியல்ல. 17.04.2017 தேதியில் ரூ.1,50,000/− வட்டியும், அசல் ரூ.3,00,000/−மும் சேர்த்து ரூ.4,50,000/−க்கு ஒரு கடன் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல.

அதற்கு பின்னிட்டு 29.12.2017 தேதியில் ரூ.4,50,000/− மற்றும் அதற்கு வட்டியோடு சேர்த்து ரூ.6,50,000/− ஒரு புரோநோட்டு எழுதி வாங்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல. 28.06.2016 தேதியில் I.V. மூலம் குழந்தை பெறுவதற்காக மட்டும் தான் ரூ.3,00,000/− கடன் பெற்றார்கள், அதற்கான வட்டியாக ரூ.7,00,000/− வரை பிரதிவாதிகள் பணம் கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரியல்ல. அதன் பிறகு ஊரில் உள்ளவர்களை அழைத்து சென்று தனக்கு ரூ.40,00,000/− பணம் கொடுக்க வேண்டும் என்று நான் மிரட்டினேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அடிக்கடி ரவுடி ஆட்களை அனுப்பி அவர்களுக்கு தொந்தரவு கொடுத்தேன் என்றால் சரியல்ல. 2016ல் வாங்கிய அசல் தொகை ரூ.3,00,000/− கொடுக்க முன்வந்தும், நான் அதை வாங்க மறுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ரூ.20,00,000/− கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன், அதை ஏன் இரண்டு பத்து லட்சம், பத்து லட்சம் புரோநோட்டுக்களாக நான் எழுதி பெற்றுக்கொண்டேன், ஒரே ரூ.20,00,000/− புரோநோட்டுக்களாக எழுதியிருக்கலாமே என்றால் அவர்கள் தான் பத்து லட்சம், பத்து லட்சமாக எழுதிக்கொடுத்தார்கள்.

அவர்கள் தான் பத்து லட்சம், பத்து லட்சமாக புரோநோட்டுக்களை எழுதிக்கொடுத்தார்கள் என்று என்னுடைய தாவாவிலும் மற்றும் முதன்மை சாட்சியத்திலும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டிருக்கிறேன். பல காலமாக எங்களிடையே கொடுக்கல் வாங்கல் இருந்தது என்ற விவரத்தை என்னுடைய தாவாவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லியிருக்கிறேன். நான் அந்த விவரத்தை தாவாவில் குறிப்பிடவில்லை, தற்போது தான் நீதிமன்றத்தில் குறிப்பிடுகிறேன் என்றால் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். தாவா புரோநோட்டில் குறிப்பிட்டுள்ள தொகையை பிரதிவாதிகள் எந்த காலத்திலும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, அந்த கையொப்பமும் அவர்களுடையதல்ல என்று சொன்னால் சரியல்ல. குழந்தையின் மருத்துவ செலவிற்காக பணம் பெற்றுக்கொண்டதாக சொல்லும் சூழ்நிலை எந்த காலத்திலும் ஏற்படவில்லை என்றால் ஏற்பட்டு தான் அவர்கள் பணம் பெற்றுக்கொண்டார்கள்.

26.08.2016ல் வாங்கிய கடனுக்காக எழுதி கொடுக்கப்பட்ட புரோநோட்டு காலம் கடந்தது என்பதாலும், இந்த தாவா புரோநோட்டுக்களை நானாகவே தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அவர்கள் தயார் செய்து கொடுத்தது தான் நான் தயாரிக்கவில்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது, அதனுடைய ஜெராக்ஸ் தான் கொடுத்தேன், அதனுடைய அசல் எல்லாம் தற்போது என் வசம் தான் உள்ளது என்றால் என் வசம் இல்லை, அது பிரதிவாதி வசம் உள்ளது. கடனை வழங்கும் நபர் தான் அசல் ஆவணத்தினை பராமரிப்பார் என்று சொன்னால் பிரதிவாதிகள் பணத்தை கொடுத்துவிட்டு ஆவணத்தை பெற்று சென்றுவிட்டார். அப்படி அவர்கள் பணத்தை கொடுத்துவிட்டு ஆவணத்தை வாங்கி சென்றிருந்தால் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்ய வேண்டிய அவசியமே இல்லை என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.**

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.